

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், குன்னம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முருக்கன்குடி, நமையூர் வரகூர், கிளியூர், அந்தூர் உள்ளிட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது வேட்பாளர் அமைச்சர் சா.சி. சிவசங்கருக்கு கிராம மக்கள் ஆரத்தி எடுத்து மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர். மாவட்ட கழக பொறுப்பாளர் வீ .ஜெகதீசன், ஒன்றிய கழக செயலாளர் சி.ராஜேந்திரன் மற்றும் காங்கிரஸ், ம.தி.மு.க., தே.மு.தி.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி, முஸ்லிம் லீக், கம்யூனிஸ்ட், உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கெம்பட்டி பகுதி, செல்வபுரம் சாலையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பகுதி கழக பொறுப்பாளர் என்.ஜே.முருகேசன், மாநகராட்சி சுகாதார குழுத்தலைவர் பெ.மாரிசெல்வன், உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வெற்றிக்குச் சூளுரைக்கும் ‘வார் ரூம் செயலி’

# மக்களுடன் ஸ்டாலின் - “வார் ரூம் செயலி” அறிமுகம் மற்றும் BDAகள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

சட்டப்பேரவைத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று மீண்டும் திராவிட மாடல் 2.O ஆட்சி அமைக்கும் வகையில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே மக்களோடு மக்களாக இருந்து களப்பணியாற்றி வருகிறது கழகம்.

மாண்புமிகு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்களின் வழிகாட்டலின் பேரில் பல்வேறு உத்திகளை செயல்படுத்தி சட்டப்பேரவைத் தேர்தலை எதிர் கொண்டு வருகிறது கழகம். அந்த வகையில் தேர்தல் நாளான ஏப்ரல் 23 ஆம் தேதி வாக்குச்சாவடி முதல், தலைமைக் கழகம் வரை ஒருங்கிணைக்கும் வகையில், மக்களுடன் ஸ்டாலின் ‘வார் ரூம்’ செயலி அறிமுகப் படுத்தப்பட உள்ளது. இந்த செயலி மூலம் தேர்தல் நாளின் போது அனைத்து வாக்குச்சாவடிகளும் ஒருங்கிணைந்து செயல்படவும், ஒவ்வொரு வாக்குச்சாவடியின் களநிலவரத்தையும் நேரடியாக தலைமைக் கழகம் மூலம் கண்காணிக்கும் வகையிலும் பயன்படுத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 75,032 வாக்குச்சாவடிகளிலும் தேர்தல் நாளில் வாக்குப்பதிவு தொடங்கியதில் இருந்து, ஒவ்வொரு மணி நேரத்திற்கும் எவ்வளவு வாக்குகள் பதிவாகி உள்ளன என்ற தகவல், வாக்குச்சாவடியில் எழும் புகார்கள் மற்றும் தேர்தல் நிறைவடைந்த பிறகு 17சி படிவத்தை டிஜிட்டல்படுத்துதல் என தேர்தல் நடைமுறைகளின் துல்லியத்தை உறுதி செய்யும் பணிகளை கழக தகவல் தொழில்நுட்ப அணியின் பூத் டிஜிட்டல் ஏஜென்டுகள் (BDA) மேற்கொள்ள உள்ளனர்.

இந்த பணிகளை மேற்கொள்ள மாநகர, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழக செயலாளர்கள் தங்கள் பொறுப்புக்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் ஏற்கனவே உள்ள பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளை(BDA) உடனடியாக இப்பணிக்கு நியமிக்க வேண்டும்.

ஐந்துக்கும் குறைவான வாக்குச்சாவடிகளைக் கொண்ட வாக்குப்பதிவு மையங்களுக்கு குறைந்தபட்சம் ஒருவர் எனவும், ஐந்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளைக் கொண்ட வாக்குப்பதிவு மையங்களுக்கு சராசரியாக 5 பாகத்திற்கு ஒரு BDA வீதம் நியமிக்க வேண்டும். ஏற்கனவே உள்ள பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளாக (BDA) தேவைக்கேற்ப தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும். வார் ரூம் செயலி பணிக்கு நியமிக்கப்படும் பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளுக்கு (BDA) தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் வார் ரூம் செயலியை எப்படிப் பயன்படுத்துவது என்பதற்கான பயிற்சி வழங்கப்படும்.

பூத் டிஜிட்டல் ஏஜென்டுகள் (BDA) மேற்கொள்ள இருக்கும் மேற்சொன்ன பணிகளை, அந்தந்த வாக்குச்சாவடிக்குப் பொறுப்பு வகிக்கும் மாவட்ட கழக செயலாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், வழக்கறிஞர் அணி சார்பில் நியமிக்கப்பட்டுள்ள தொகுதி பொறுப்பாளர், தொகுதி மற்றும் வாக்குச்சாவடி அளவிலான நிர்வாகிகள் கண்காணிப்பது அவசியம்.

மக்களுடன் ஸ்டாலின் வார் ரூம் செயலி மூலம் தேர்தல் நாளின் போது உடனுக்குடன் பெறப்படும் தகவல்கள், புள்ளிவிவரங்கள் நமது கழக வெற்றியை உறுதி செய்வதற்குத் துணை நிற்கும்.

மக்களுடன் ஸ்டாலின் ‘வார் ரூம்’ செயலியைப் பயன்படுத்த பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளை (BDA) நியமிப்பது, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது உள்ளிட்ட ஆயத்தப் பணிகள் முழுமையாக நடைபெறுவதை மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கழக செயலாளர்கள் உறுதி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**

**“அண்ணா அறிவாலயம்”**
**சென்னை18. தி.மு.க.**
**நாள் : 13-4-2026.**

# “சித்திரைத்திங்களில் முத்திரைப்போர்”....



**ஒ**ரு பக்கம்
பெற்ற மகனின் துரோகத்திற்கு
பாடம் புகட்டத் துடிக்கும் தந்தையாக மருத்துவர் ராமதாஸ் ..

அவரோடு சேர்ந்து தன் முதுகில் குத்திய எடப்பாடிக்கும்
அந்த துரோகியோடு சேர்ந்து கொண்டு
தன் நெஞ்சிலேயே குத்திய
தன் அக்காள் மகன் தினகரனுக்கு
பாடம் போதிக்க களம் குதித்துள்ள சின்னம்மா சசிகலா...

இவையாவுக்கும் மேலாக திராவிடத்திலிருந்து தமிழினத்தை
பிரிக்க
நாம் தமிழர் சீமான் என்றும்...

அதே திராவிடத்திலிருந்து சிறுபான்மை சமூகங்களை பிரித்துச் சிதைக்க
நடிகர் விஜய்க்கு “ஜோசப் விஜய்” என மத அடையாளம் கொடுத்து
தூண்டப்பட்டுள்ள
த.வெ.க.வையும்
தங்களுக்கு
புறத்துணையாக வைத்துக் கொண்டு..

“ஒன்றை எதிர்த்து அழிப்பது
மற்றொன்றை ஆதரித்து ஒழிப்பது” என்னும் நாக்பூர் சூழ்ச்சியோடு

திராவிட அரசியலை வேரறுக்கும் வெறியோடு

திராவிட கட்சி ஒன்றையே ஆயுதமாக்கிக் கொண்டு

பல பாதாளத் திட்டங்களோடு களமிறங்கியிருக்கும்
“பாரதீய ஜனதா”வின்
சித்தாந்த பகையை முறியடிக்க ...

ஆரியத்துக்கு எதிராக
பெரும் போர்
நடத்தி வருகிறார்
திராவிடச் சூரியனாம்
“முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்“

ஆம்....

இது தமிழ் மண்ணுக்கான தேர்தல்
என்பதை விட

இது
புறநானூற்று பூகோளத்தை அடிமைப்படுத்த
நினையும்


வடக்கிந்திய கம்பெனிக்கு எதிரான
ஜனநாயகப் போர் என்பதே
நிச்சயம்..

இதில்

பெரியாரும்
அண்ணாவும்
கலைஞரும்
மடியிட்டு
வளர்த்த திராவிடப் பெரும்படை
வென்று காட்டும் என்பது சத்தியம்...

விழிப்பாய்
தம்பி
நெருப்பாய்...

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*

### குன்னம் தொகுதியில் நாளை

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பரப்புரை!

## அரியலூர் மாவட்டக் கழகத்தினருக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் வேண்டுகோள்!

*அரியலூர், ஏப்.15-*

அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில், ஒன்றிய, நகர மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

நடைபெற்ற கூட்டத்தில் அரியலூர் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சா.சி.சிவசங்கர் நாளை ( 16 ஆம் தேதி),கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் குன்னம் தொகுதிக்கு உட்பட்ட ஒதியம் பிரிவில் பெரம்பலூர், குன்னம், அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் தேர்தல் பரப்புரை மேற்கொள்ள உள்ளார்.

அதுசமயம் கழக நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொள்ளவேண்டும், தொடர்ந்து அரியலூர், ஜெயங்கொண்டம், குன்னம் உள்ளிட்ட சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் தீவிரமான தேர்தல் களப்பணிகள் குறித்து மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகளுடன் ஆலோசனைகள் வழங்கினார். தொடர்ந்து பேசுகிகையில் மக்களின் நலன் ஒன்றையே முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு உழைக்கும் நமது கழகத் தலைவர் தளபதி மு.க ஸ்டாலின் அவர்களின் கரங்களை வலுப்படுத்தி, மக்கள் பணியைத் தொடர்ந்து சோர்வின்றி முன்னெடுத்து, திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைக்க அனைவரும் ஒன்றாக உழைப்போம்.



நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இரண்டாவது முறையாக மீண்டும் அரியணையில் அமர்த்த அனைவரும் ஒருங்கிணைந்து சோர்வின்றி உழைப்போம்! என கூறினார்.

இக்கூட்டத்தில் குன்னம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ஏ.கே. அருண், ஜெயங்கொண்டம் அரியலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ப.அன்பரசு, ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் கன்னிகை ஸ்டாலின் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, பூ. செல்வராஜ், இரா.மணிமாறன்,

மா.அன்பழகன், கோ.அறி வழகன், ஆர். கலிய பெருமாள், வி.எழில் மாறன், இரா.அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், கே.ஜி.எஸ்.முருகன், இரா.செந்தில்குமார், நகர கழக செயலாளர்கள் இரா. முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் கழக செயலாளர்கள். ப.கோபால கிருஷ்ணன் அ.அல்போன்ஸ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே. சி.லூயிகதிரவன், மற்றும் மாவட்ட,, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிமனையை தி.மு.க. தொகுதி பார்வையாளர் இரா.சங்கர் திறந்து வைத்தார்.உடன் கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் நாகைமாலி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டகட்சி மாவட்டச் செயலாளர் மாரிமுத்து மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கே.பி.சூர்ய பிரகாஷை ஆதரித்து பெரியநாயக்கன்பாளையம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வீதி வீதியாகச் சென்று கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.